**இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிரசொல்லப்பட்ட பதிவேடுகளுக்கு இசைவாக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கும் அமைய இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) உயர் கணக்கீட்டுக் கோட்பாடுகளின் பிரகாரம், கட்டிடங்களுக்கு உரித்தான தற்போது நடைபெறும்வேலைப் பெறுமதியான ரூபா 9,314,164 தொகை ஐந்தொகையில் நிலையான சொத்துக்களின் கீழ் வேறான விடயமாக காண்பிக்கப்பட்டிராததுடன் நிலையான சொத்துக்களின் பெறுமதியுடன் சேர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) கேட்போர் கூடத்திற்குத் தேவையான கதிரைகளுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 861,821 தொகையான முற்பணத் தொகையும் கட்டிட நடைபெறும்வேலையின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

### 1.2.2 பெறவேண்டிய கணக்குகள்

ரூபா 1,810,760 தொகையான கடன்பட்டோர் மீதியில் ரூபா 316,434 தொகை இரு ஆண்டுகளுக்கு மேலான காலமாகவும் ரூபா 1,494,326 தொகை ஒரு வருடத்திற்கு மேலான காலமாகவும் அறவிடப்படவேண்டியிருந்தது.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 169,729,449 தொகையான 5 முதலீட்டுக் கணக்குகளிற்கு அந் நிறுவகங்களிடம் இருந்து பெறப்பட்ட மீதிகளின் உறுதிப்படுத்தல்களில் ரூபா 28,793 தொகையான வேறுபாடு காணப்பட்ட போதிலும் அவ்வேறுபாட்டை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் 53 ஆம் இலக்க அதிகாரச்சட்டம் மற்றும் 1999 இன் 9 ஆம் இலக்க கொள்கை கற்கைகள் நிறுவக திருத்தச்சட்டம் - 3 ஆம் பிரிவு | கணக்காய்வின் போது தகமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரை உதவிக்கு நியமிக்கப்படுவதற்கும் அவரை வழிநடத்துவதற்கும் அதிகாரசபை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் ஒப்படைத்திருந்த போதிலும் 3 சந்தர்ப்பங்களின் போது 3 செயற்திட்டத்திற்கு உரித்தான கணக்காய்வுகள் கணக்காய்வாளர் |

| | | |
|---|---|---|
| | | தலைமை அதிபதியின் அங்கீகாரம் இன்றி தனியார் கணக்காய்வுக் கம்பனி ஒன்றிடம் ஒப்படைத்திருந்தது. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | i. 9.2 (பீ) ஆம் பந்தி | பதவியணி கோப்பு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | ii. 9.3 (i) ஆம் பந்தி | நிறுவக ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளுக்காக அமைச்சின் அங்கீகாரமும் அதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் உடன்பாடும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | iii. 9.14.2 ஆம் பந்தி | மனிதவள முகாமைத்துவத்திற்கான தாபன நடைமுறைவிதிக் கோவை ஒன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்காக திறைசேரிச் செயலாளரினதும் பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் உடன்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2009 மே 26 ஆம் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்டிராததுடன் ஊழியர்களுக்கு கௌரவக் கொடுப்பனவாக ரூபா 2,248,069 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1994 யூன் 14 ஆம் திகதிய பீஎப்/பீஈ 95 ஆம் இலக்க | முன்னங்கீகாரம் பெறப்படாது உத்தியோகத்தர்களுக்கு 2010 ஏப்ரல் மாதம் |

| | | |
|---|---|---|
| | பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | ஊக்குவிப்புப் கொடையாக ரூபா 268,621 தொகைச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 1998 ஏப்ரல் 20 இன் 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | கட்டிட நிதியத்திற்காக வெளிநாட்டு மானியங்கள் தொடர்பாக சகல கொடுக்கல் வாங்கல்களும் திறைசேரியின் வெளிநாட்டு வளத் திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 13,214,520 தொகையான மானியங்கள் நிறுவகத்திற்கு நேரடியாகக் கிடைக்கப்பெற்றிருந்தன. |
| (ஊ) | 2006 கொள்வனவு நடைமுறை வழிகாட்டலின் 5.4.4 ஆம் பிரிவு | ரூபா 66,358,610 தொகையான ஒப்பந்தப் பெறுமதியில் 20% இற்கு மேலான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் இதற்கான பிணைமுறி பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாடுகளின் விளைவுகள் ரூபா 26,294,271 பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் போது ரூபா 25,643,254 ஆன மிகையானமையால் நிதிசார் விளைவில் ரூபா 51,937,525 ஆன வீழ்ச்சியை காட்டுகின்றது. இவ்வீழ்ச்சி குறித்து அரசாங்கப் பங்களிப்பு, வட்டி வருமானம் மற்றும் ஒப்பந்த தாமதக் கட்டணப் பெறுவனவு போன்ற ரூபா 40,509,897 கூட்டுத்தொகையால் குறைவாகவும் ஊழியர் செலவினம், பெறுமானத்தேய்வுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுச் செலவினங்கள்,

பயன்பாட்டுச் செலவினங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்கள் போன்றன ரூபா 13,781,174 கூட்டுத்தொகையால் அதிகரித்தமையும் இதற்குக் காரணமாகியிருந்தன.

**2:2. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------

**2.2.1 செயலாற்றுகை**

--------------------------

மீளாய்வாண்டின் போது எய்தப்பட வேண்டிய இலக்குகள் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராமையால் உள்ளபடியான செயலாற்றுகையை ஒப்பிட முடியாதிருந்தது.

**2.2.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

-----------------------------------------

(அ) செயற்திட்டத்திற்காகப் பணம் பெறப்படுவதற்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டு அப் பணம் பெறப்படும் சந்தர்ப்பத்தில் வெளிநாட்டுப் பணத்திற்குச் சமனான ரூபா பெறுமதியில் வேறுபாடுகள் சீராக்கப்பட்டதை அடுத்து ரூபா 2,864,421 தொகையான அந்நிய செலாவணி நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2008 ஆம் ஆண்டின் போதான மதுபானப் பயன்பாடுகளில் செயற்திட்டத்தில் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 520,000 தொகை பெறப்பட்டிராத காரணத்தினால் மீளாய்வாண்டின் போது அத் தொகை ஐயக்கடனாக வருமானத்தில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 உள்ளகக் கணக்காய்வு**

----------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு செயற்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கடன் கோவைகள்